# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.02 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர் | - | நந்தினி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சபரி கார்த்திக் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 28/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-11-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

( எதிரி தரப்பில் குவிமுச. பிரிவு 311 ன் கீழான மனு Crl.M.P.No.244/2025 -ல் அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9-ம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் நன்கு எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும். நானும், எனது கணவர் சபரிகார்த்திக்கும் எந்த தேதியில், எத்தனை மணிக்கு எந்த காவல் நிலையம் சென்றோம் என்றால் புகார் கொடுக்க நான் போகவில்லை. எனது கணவர் சபரிகார்த்திக்கும், அண்ணன் மணிக்குமார் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர் மதன் ஆகியோர்கள் சென்று 06.02.2023-ம் தேதி காலை 08.00 மணியளவில் வால்பாறை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். நாங்களும், எதிரியும் எத்தனை வருடங்களாக அங்கு குடியிருந்து வருகிறோம் என்றால் 10 வருடங்களாக குடியிருந்து வருகிறோம். எதிரி என்னேரமும் குடிபோதையில் இருப்பார் என்றால் சரிதான். எதிரி குடிபோதையில் இருந்ததால் நான், நந்தினி, திவ்யா ஆகிய எல்லோரும் சேர்ந்து எதிரியை அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் பேசி திட்டி, குடிபோதையில் நிதானம் இல்லாமல் இருந்தவரை கெட்ட எண்ணத்தில் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் காட்டிய கல்

போன்று வெளியில் கிடைக்கும் என்றால் அந்த கல் வீட்டுக்கு முன்னால் இருந்ததை போலீசிடம் நாங்கள் அடையாளம் காட்டிய கல் ஆகும். நாங்கள் ஏன் சம்பவம் முடிந்தவுடனேயே புகார் கொடுக்க செல்லவில்லை என்றால் இரவு நேரம் என்பதால் நாங்கள் அங்கு செல்லவில்லை. மறுநாள் நாங்கள் ஏன் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் எனது கணவரும், மற்றவர்களும் அவர்கள் சென்று புகார் கொடுப்பதாக சொன்னதால் நாங்கள் சென்று புகார் கொடுக்கவில்லை. உண்மையிலேயே நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்ததால் நானே நேரடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடம் பொது இடம் அல்ல என்றால் வீட்டிற்கு முன்னால் நடந்தது. நாங்கள் எங்கள் வீட்டிலிருந்து , வால்பாறை காவல் நிலையத்திற்கும் நடந்து சென்றால் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். உண்மையிலேயே எதிரி கொலை மிரட்டல் விடுத்திருந்தால் நாங்கள் உடனே சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும்,எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமல்ல என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | பழம் வியாபாரம் |
| பெயர் | - | சபரி கார்த்திக் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வெள்ளியங்கிரி | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 37/2025 |
| சாதி | - | | | | |

<u>**24-11-2025**</u>

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

( எதிரி தரப்பில் குவிமுச. பிரிவு 311 ன் கீழான மனு Crl.M.P.No.244/2025 -ல் அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் எத்தனை வருடங்களாக பழவியாபாரம் செய்து வருகிறேன் என்றால் கடந்த 20 ஆண்டுகளாக பழ வியாபாரம் செய்து வருகிறேன். நான் பழ வியாபாரம் முடித்து வழக்கமாக எத்தனை மணிக்கு வீட்டிற்கு செல்வேன் என்றால் வழக்கமாக இரவு 08.00 மணியளவில் வீட்டிற்கு செல்வேன். ஞாயிற்றுகிழமை என்றால் 07.00 மணிக்கு செல்வேன். என்ன சம்பவம் என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். சம்பவம் நடக்கும் போது நான் இருந்தேன். எனது மனைவியை கெட்ட வார்த்தையால் எதிரி பேசியதாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். புகாரை நான் கைப்பட எழுதினேனா என்றால் ஆமாம். என்னை எதிரி கெட்ட வார்த்தையால் பேசினாரா என்றால் ஆமாம். அதை நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த உடனேயே நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏன் உடனேயே புகார் கொடுக்கவில்லை என்றால் இரவு நேரம் என்பதால் புகார் கொடுக்கவில்லை. எம்.ஜீ.ஆர் நகரில்

இருந்து வால்பாறை காவல் நிலையத்திற்கு 10 நிமிடம் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று எதிரி எவ்வாறு இருந்தார் என்றால் குடிபோதையில் இருந்தார். உண்மையிலேயே வழக்கு சம்பவம் நிகழ்ந்திருந்தால் உடனே புகார் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல. குழந்தையை கழுத்தை நெரித்து கொன்றுவிடுவதாக ஒருவர் மிரட்டினால் யாராக இருந்தாலும் ஒரு அச்சம் வரும் அவ்வாறு எதிரி மிரட்டி இருந்தால் நாங்கள் பயந்து உடனே புகார் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல எதிரி யாரையும் கெட்டவார்த்தையால் பேசவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவர் வழக்கமாக குடித்துவிட்டு குடிபோதையில் வருவதால் அவரை பழிவாங்க வேண்டும் என்பதற்காக நான் தவறாகபுகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கல் என்பது வெளியில் கிடைக்ககூடியது என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.03 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர் | - | திவ்யா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | மணிக்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 34/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-11-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

( எதிரி தரப்பில் குவிமுச. பிரிவு 311 ன் கீழான மனு Crl.M.P.No.244/2025 -ல் அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான், அ.சா.1 சபரிகார்த்திக், அ.சா.2 நந்தினி ஒரே இடத்தில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். நாங்கள் உறவுக்காரர்களா என்றால் இல்லை. ஒரே பகுதியில் குடியிருக்கிறோம். எதிரி வின்செென்ட் எத்தனை வருடங்களாக நாங்கள் இருக்கும் பகுதியிலேயே குடியிருக்கிறார் என்றால் நான் திருமணம் ஆகி வந்து 14 வருடங்கள் ஆகும். அவர் அங்கு தான் குடியிருக்கிறார். வழக்கு சம்பவம் நிகழும் போது அ.சா.1 சபரி கார்த்தி சம்பவயிடத்தில் இல்லை என்றால் அவர் அப்போது தான் மேலே இருந்து வந்தார். எதிரி வின்சென்ட் என்னை அசிங்கமாக பேசியதாக நான் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் சம்பவம் நடைபெறும் போது இரவு 07.00 மணியிருக்கும் அவர் அசிங்கமாக பேசி அவர் வெளியே வந்தால் குழந்தைகளை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதால் நாங்கள் பயந்து வீட்டிற்குள் இருந்தோம். வழக்கு சம்பவம் சுமார் 2 மணிநேரம் நடந்தது.

இரவு 09.00 மணி ஆனதால் நாங்கள் உடனடியாக புகார் கொடுக்கவில்லை. இந்த விவரங்களை புகாரில் அ.சா.1 சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அ.சா.1 கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். உண்மையிலேயே நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்தால் உடனே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு நடந்து சென்றால் 10 நிமிடத்தில் சென்றுவிடாமல் என்றால் 15 நிமிடம் ஆகும். எதிரி வழக்கமாக குடிப்பார் என்பதால் அவருக்கு எதிராக நாங்கள் தவறாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றாலும், அ.சா.1 கொடுத்த தவறான புகாருக்கு வலுவுட்டுவதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 04-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர் | - | பிரவீனா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | மதன் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 37/2025 |
| சாதி | - | | | | |

<u>**24-11-2025**</u>

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

( எதிரி தரப்பில் குவிமுச. பிரிவு 311 ன் கீழான மனு Crl.M.P.No.244/2025 -ல் அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் BA படித்துள்ளேன். நான் தனிப்பட்டு ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் பொதுப்படையாக பெண்கள் அனைவரையும் அசிங்கமாக பேசியதால் நான் புகார் கொடுக்கவில்லை. எம்.ஜீ.ஆர் நகரில் குடியிருக்கும் அனைவருக்கும் இது தெரியும் என்றால் சரிதான். நான் தனியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி குடிபோதையில் இருந்தார் என்றால் சரிதான். எதிரி குடிபோதையில் நிதானம் இல்லாமல் இருந்ததால் நான் சொல்லுவது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் நான் உடனே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 05-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 05 | தொழில் | - | டாஸ்மாக் சூப்பர்வைசர் |
| பெயர் | - | மதன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முத்துப்பாண்டியன் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 44/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-11-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

( எதிரி தரப்பில் குவிமுச. பிரிவு 311 ன் கீழான மனு Crl.M.P.No.244/2025 -ல் அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் சோலையார்டேம் டாஸ்மாக் கடையில் எத்தனை வருடங்களாக சூப்பர்வைசராக இருந்து வருகிறேன் என்றால் கடந்த 7 வருடமாக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வேலை நேரம் என்ன என்றால் மதியம் 12.00 மணியில் இருந்து இரவு 10.00 மணி ஆகும். அ.சா.4 பிரவீனா எனது மனைவி என்றால் சரிதான். அ.சா.1 குடும்பமும், நாங்களும் ஒரே இடத்தில் குடியிருக்கிறோம் என்றால் ஆமாம். பக்கத்து பக்கத்து வீட்டில் குடியிருக்கிறோம். அந்த இடத்தில் வீடுகள் மட்டும் உள்ளது. பொது இடமாக இல்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வேலை நேரம் முடித்து எத்தனை மணிக்கு வீட்டிற்கு செல்வேன் என்றால் சம்பவதினமன்று முன் அனுமதி பெற்று வீட்டிற்கு சீக்கிரமாக வந்தேன். எதிரி எத்தனை வருடங்களாக நாங்கள் இருக்கும் பகுதியில் குடியிருந்து வருகிறார் என்றால் பிறந்து, வளர்ந்தே அந்த பகுதியில் தான். எதிரி குடி பழக்கம் உள்ளவர் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று குடிபோதையில் நிதானமின்றி எதிரி இருந்தார் என்றால் குடிபோதையில் நிதானமாக தான்

இருந்தார். எதிரி குடிபோதையில் நிதானமின்றி இருந்ததால் அவர் யாரையும் கெட்ட வார்த்தையில் பேசவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றாலும், நாங்கள் தான் அவரை கெட்ட வார்த்தையால் பேசினோம் என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2-ம் நாங்கள் ஒரே லைனில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். அதனால் அ.சா.1 கொடுத்த தவறான புகாரை வலுவூட்டுவதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.06 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 06 | தொழில் | - | சிவில் கான்ட்ராக்டர் |
| பெயர் | - | மணிக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மருதமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 45/2025 |
| சாதி | - | | | | |

**24-11-2025**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

( எதிரி தரப்பில் குவிமுச. பிரிவு 311 ன் கீழான மனு Crl.M.P.No.244/2025 -ல் அனுமதிக்கப்பட்டு, சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எதிரி வின்சென்டை எத்தனை வருடமாக தெரியும் என்றால் சிறுவயதில் இருந்தே வின்சென்டை தெரியும். சம்பவ நாளில், சம்பவயிடத்தில் நான் இல்லை என்றால் சம்பவம் நடந்து கொண்டிருந்தபோது நான் வந்தேன். கெட்ட வார்த்தையால் எதிரி பேசிக்கொண்டிருந்தார் நாங்கள் வருவதை பார்த்தவுடன் வீட்டிற்குள் சென்று விட்டார். எதிரி வீட்டிற்குள் சென்ற பின்பு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி வீட்டிற்குள் சென்றுவிட்ட பிறகு நாங்களும் வீட்டிற்குள் சென்ற பின்பு மீண்டும் எதிரி வெளியே வந்து கெட்ட வார்த்தையால் பேசினார். சம்பவதினத்தன்று எதிரி குடிபோதையில் நிதானம் இல்லாமல் இருந்தார் என்றால் சரிதான். எதிரி குடிபோதையில் நிதானம் இல்லாமல் இருந்ததால் நான் சொல்லுவது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த தவறாக புகாருக்கு வலுவூட்டுவதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.